**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.443 நாள்: 03.09.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மண்டல கண்காணிப்பு அலுவலர் திரு.கே.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இன்று (03.09.2026) அடையாறு மண்டல கண்காணிப்பு அலுவலர் திரு. கே.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-176க்குட்பட்ட ஸ்ரீனிவாசா நகர் 2ஆவது தெருவில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, உள்வட்ட சாலை அருகில் ரெட்டிங்டன் டவர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து மழைநீர் வீராங்கால் ஓடையில் இணையும் பகுதி, வெளச்சேரி ஏரியில் உள்ள அகாயத்தாமரைகள், செடிகள் இயந்திரம் மூலம் அகற்றும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மண்டல கண்காணிப்பு அலுவலர் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கும் பணி ஆகியவற்றை பருவமழைக் காலத்திற்கு முன்னதாக முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல அலுவலர் திரு.என்.காளிதாஸ், மாநகராட்சி மற்றும் சேவைத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**